விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 15 வெள்ளிக்கிழமை (28.04.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 130

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## ஏ-9 பாதை திறக்கப்பட்டது

### போக்குவரத்துக்கள் வழமைக்கு

(யாழ்ப்பாணம்)

ஏ-9 பாதை நேற்று திறந்துவிடப்பட்டது. கொழும்பு இராணுவத்தலைமையகத்தில் இடம்பெற்ற குண்டுத்தாக்குத லையடுத்து மூடப்பட்டிருந்த முகமாலை மற்றும் ஓமந்தைச் சோதனைச் சாவடிகள் நேற்று இராணுவத்தினரால் திறந்துவிடப்பட்டது.

வழமைபோன்று நேற்றுக்காலை 7மணி முதல் மாலை 5மணிவரையும் பாதை திறந்திருந்தாக தெரிவிக்கப்பட்டது. இதேபோன்று உயிலங்குளம் சோதனைச்சாவடியும் நேற்றுக்காலையே திறந்து விடப்பட்டது.

எனினும் செங்கலடி கருந்தப்பாலம் நேற்று 11.30 மணியளவில் திறந்து விடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. நேற்று ஏ-9 பாதை திறக் கப்பட்டபோது பெருமளவானோர் போக்கு வரத்தில் ஈடுபட்டதை காணக்கூடியதாக இருந்தது.

ஓமந்தையில் தங்கியிருந்த அத்தியாவசியப்பொருட்களை ஏற்றிவந்த லொறிகள் ,எண்ணெய்ப் பவுசர்கள் என்பன இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

ஏ-9 பாதை மூடப்பட்டதையடுத்து சில பொருட்கள் திடீரெனக்காணாமல் போயிருந் தன. அதேபோல் சில பொருட்கள் இரண்டு மடங்கு விலைக்கும் பெறமுடியாத நிலை காணப்பட்டன.

இந் நிலையில் பாதை திறக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டமையானது மக்கள் மத்தியிலான போர்ப் பீதியைக்குறைத்துள்ளது. இதேவேளை பாதுகாப்புக் காரணங் களுக்காக வீதிகள் விரைவில் திறக்குமென இராணுவப் பேச்சாளர் (08ஆம் பக்கம் பார்க்க)

## தலை துண்டிக்கப்பட்ட நிலையில் ஐந்து தமிழர்களின் சடலம் மீட்பு

(கொழும்பு)

கொழும்பில் தேடுதல் நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டு காணாமல்போன 5 தமிழர்கள் தலை துண்டிக் கப்பட்ட நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளன. அவிசாவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புவாக்பிட்டிய மற்றும் தெகியோவிட்ட ஆகிய இடங்களில் இத் தலையில்லாத உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இச் சடலங்கள் தமிழ் இளைஞர்களது சடலங்களாக இருக்கலாம் என்று கருதுவதாக அப்பிரதேச பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அனைத்தும் ஆண்களின் சடலங்கள் என்றும் அவர்களது உடைகள் பெரும்பகுதி களையப்பட்டும் பாரிய வெட்டுக்காயங்களும் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மலைய மக்கள் முன்னணி தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் கடிதம் மூலம் (08ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளின் பயணத்திற்கு சீ-பிளேன் வசதிசெய்தது அரசு!!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கிழக்குத் தளபதிகள் கிளிநொச்சிக்கு வருவதற்கு சீ-பிளேன் வழங்க அரசாங்கம் சம்மதம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக விடுதலைப்புலிகளுக்கு நோர்வே ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அரச சமாதான செயலக பணிப்பாளர் பாலித கோகன்ன தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையை கருத்தில் கொண்டு இவ்வசதியை வழங்க அரசு முன்வந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனீவாப் பேச்சுவார்த்தை மிகவிரைவில் ஆரம்பமாகும்

### பௌயர் நம்பிக்கை

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதன் அவசியத்தை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் தமக்கு அறிவித்துள்ளதாக நோர்வே அறிவித்துள்ளது.

தற்போது இதற்கான வேலைத்திட்டங்களை தாம் ஆரம்பித்து விட்டதாக நோர்வேயின் விசேட பிரதிநிதி ஜோன் ஹன்சன் பௌயர் ரொய்ட்டர் செய்திச்சேவைக்கு வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்தார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையினை பாதுகாக்கவும் ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவேண்டும் என்றும் இரு தரப்பினரும் வலியுறுத்தியுள்ளனர்.

இதன் அடிப்படையில் ஜெனீவாப்பேச்சு மிக விரைவில் (08 ஆம் பக்கம் பார்க்க)

## வங்காலை-ஊர்காவற்றுறையில் நேற்று கிளைமோர்த் தாக்குதல்

### ஐந்து படையினர் பலி

(வங்காலை)

வங்காலையில் நேற்று நடத்தப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் மூன்று இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர்.

'வங்காலை அருகே வள்ளிக்குளம் நோக்கி படையினர் செல்லும் போது வங்காலை-நானாட்டான் வீதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் இச் சம்பவம் நடந்ததாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளைமோர்த்தாக்குதல் நடத்தப்பட்ட இடத்திற்கு அருகாமையில் உள்ள திருவாபுரி வீடமைப்புத் திட்ட பகுதியைச்சேர்ந்த மக்கள் அங்கிருந்து இடம்பெயரத்தொடங்கியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஊர்காவற்றுறையில் நேற்றுக்காலை 6.30 மணியளவில் நடத்தப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் கடற்படையினர் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரை இலக்குவைத்து ஊர்காவற்றுறை புளியங்கூடல் வீதியில் உள்ள செருக்கன் சந்தியில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (08ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல்களை நிறுத்தியதாக அரசாங்கம் நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை நிறைவடைந்து விட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இராணுவத்தலைமையகத்தினுள் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலுக்குப் பதிலாக திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்ட முப்படையின் தாக்குதல்களும் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சமாதானத்தைக் குழப்பும் வகையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறு இந்திய அரசு வேண்டிக் கொண்டதையடுத்து திருமலைத் தாக்குதல் நிறுத்தப்பட்டுள்ளதாக கூறப்பட்டது.

இதேவேளை இலங்கை நிலைமைகள் தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நேற்று புதுடில்லியில் ஆலோசனை நடத்தினார்.

ஜேர்மனி மற்றும் உஷ்பெஸ்கித்தான் ஆகிய நாடுகளுக்கு ஐந்து நாள் பயணம் மேற்கொண்டிருந்த (08 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

குருஷேத்திரம்

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:

021 - 222 3891, 222 6297, 077 - 2349999,

011 - 2372952/3, 011 - 2360290/1

e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.

எக்ஸ்போ ஏயார்

வானத்தில் உங்கள் நண்பன்...



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பேச்சுவார்த்தைகளை இலக்கு வைத்தே தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாம்

## அரசியல் ஆய்வாளர்கள் கருத்து

இலங்கைத் தீவில் கடந்த சில நாட்களாக நடைபெற்று வரும் தாக்குதல்கள் போர் முரசு அறைந் திருப்பினும் பேச்சுவார்த்தைகளை இலக்கு வைத்தே நடத்தப்பட்டுள்ள தாக அரசியல் ஆய்வாளர்கள் தெரி விப்பதாக வெளிநாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விமானத் தாக்குதல்கள், மோட் டார் தாக்குதல்கள், கொழும்பின் மையத்தில் நடத்தப்பட்டுள்ள தாக் குதல்கள் என விடுதலைப்புலிகளா லும் இலங்கை அரசாங்கத்தினா லும் போர் முரசறையப்பட்டுள்ள போதிலும் உண்மையில் அமை திப் பேச்சுக்களுக்குத் தயாராகவே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்ட தாக ஆய்வாளர்கள் தெரிவித்துள் ளனர்.

ஓய்வுபெற்ற பிரிகேடியர் ஜென ரல் விபுல் பொடெஜு கூறு கையில்,

நாட்டின் எந்தப்பகுதியை வேண் டுமானாலும் தாக்க முடியும் என்று அவர்கள் உலகுக்கு காண்பித்து விட்டார்கள். அதே நேரத்தில் விமா னத் தாக்குதலை விடுதலைப் புலிகள் சாதாரண விடயமாக எடுத் துக்கொள்ள மாட்டார்கள் என்றார்.

அவர்கள் பாரிய அளவில் தாக்குதல் நடத்துவார்கள். அது ஒரு இராணுவ முகாமாகக் கூட இருக்கலாம். கொழும்பின் பொரு ளாதார நிலையாகவும் இருக்க லாம். அதன் பின்னர் இருதரப்பி ன்ரும் சரி இப்போது பேச்சுக்கு செல்லலாம் என்று கூறுவார்கள் என்றார் அவர்.

மற்றொரு ஓய்வுபெற்ற விமா னப் படை அதிகாரியான ஹாரி குணதிலக்க கூறுகையில், சுவிசில் அடுத்தகட்டப்பேச்சுக்களுக்கு ஒப்புக்கொள்ளும் முன்பாக தங் களது பலத்தை வலுப்படுத்த புலி கள் எண்ணுகிறார்கள் என்றார்.

மக்களுக்கு தங்கள் பலத்தை வெளிப்படுத்திய பின்பு ஜெனீவா பேச்சுக்களுக்குச் செல்ல வேண் டும் என்று புலிகள் நினைத்திருக் கிறார்கள். கடந்த காலங்களில் இத்தகைய யுத்திகளைத்தான் விடுதலைப் புலிகள் மேற்கொண் டனர் என்றும் அவர் கூறினார்.

இலங்கை அரசாங்கம் எல் லைக்குட்பட்ட வான் தாக்குதல் களை நடத்தினால் மட்டுமே மே மாதம் ஜெனீவாவில் பேச்சுக் கள் நடைபெறும் சாத்தியம் உள்ளது என்றும் அவர் கூறினார்.

ஆனால் தமிழ் மக்கள் இத் தாக்குதல்களில் கொல்லப்பட்டால் மிகப் பாரிய பேரழிவு ஏற்படுத் தும் பெருந்தீயாக அது அதிகரித்து விடும் என்றார் ஹாரி குணதிலக்க. இலங்கையின் சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோகென்ன கூறுகையில், மேலதிக ஆத்திர மூட்டல் நடவடிக்கைகளைக் கட் டுப்படுத்தக்கூடிய, தடுக்கக்கூடிய ஒரு தாக்குதலை மட்டுமே மேற் கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

இலங்கை முன்னாள் பிரதி வெளிவிவகாரச் செயலாளர் நந் தகல்யான கொடகே கூறுகையில், இலங்கை அரசாங்கம் ஒரு குறிப் பிட்ட அளவிலான தாக்குதலை நடத்த அனுமதித்துள்ளது. மற் றொரு நாடாக இருந்தால் தாக்கு தலை கடுமையாக நடத்தியிருக் கும் எனக்குறிப்பிட்ட அவர், கம் போடியாவில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படை அனுப்பி வைக்கப்பட்டதுபோல் இலங்கைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என் றார். (கு)

# சகஜ நிலைக்குத் திரும்பும் திருமலை

கடந்த சில தினங்களாக திரு கோணமலை பிரதேசத்தில் நிலவி வந்த பதற்ற நிலைதற்போது தணிந்து காணப்படுவதாக அங்கிருந்து கிடை க்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை நகரப்பிர தேசத்தில் மக்கள் நடமாட்டம் காணப் படுவதாகவும், அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கொள் வனவு செய்வதில் அவர் கள் அதிக ஆர்வம் காட்டுவதாகவும் தெரிகிறது.

மக்கள் நடமாட்டம் திருகோண மலை நகரைசுற்றியே காணப்படு வதாகவும் நகருக்கு வெளியே எவ ரும் செல்வதில்லை என்றும் கூறப் படுகிறது. (து)

# இரத்த தானம்

(யாழ்ப்பாணம்)

தற்போது நிலவிவரும் அசா தாரண சூழ்நிலை காரணமாக யாழ்.போதனாவைத்தியசாலைக்கு வருகைதரும் குருதிக் கொடை யாளர் வரவு குறைவடைந்துள் ளதால் அனைத்துவகைக் குருதி களுக்கும் பற்றாக்குறை நிலவு வதாக யாழ்.போதனா வைத்திய சாலை இரத்த வங்கி வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

குருதிப் பற்றாக்குறையை சீர்செய்யுமுகமாக இரத்த தானம் செய்வதற்கு பொது மக்கள் முன் வரவேண்டுமென்றும் அவர் மேலும் கேட்டுள்ளார். (து)

# மைத்திரிபால சிறிசேனாவை கொலை செய்ய முயற்சி?

## இரு தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

விவசாய, மகாவலி நீர்ப்பா சன அமைச்சரான மைத்திரிபால சிறிசேனாவை கொலைசெய்ய முயற்சித்ததாகச் சந்தேகிக்கப் படும் இரு தமிழ் இளைஞர்களை பொலனறுவைப்பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கதுரு வெலவில் வைத்து கைதுசெய் துள்ளனர்.

இவர்களில் ஒருவர் சயனைட் வில்லை விழுங்கியதனால் ஆபத் தான நிலையில் உடனடியாக பொலனறுவை வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைகள் பல வற்றில் உத்தியோக பூர்வமாக பணிகளை ஆரம்பிக்கும் பல நிகழ்வுகளில் அமைச்சர் மைத் திரிபால சிறிசேன உட்பட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொள்ள விருந்ததாக பொலனறுவைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலனறுவையில்படுகொலை கள் பலவற்றை மேற்கொள்வதற் காக அங்கு புலிகள் பலர் ஊடுரு வியிருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டது. அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் இந்தக் கொலை முயற்சி தொடர்பாக வினவிய போது தனது அமைச்சின் பாதுகாப் புப் பிரிவு அதிகாரிகளும், பொலி ஸாரும் இணைந்து கொலை முயற்சியில் ஈடுபட்ட இரு புலிகளை கைதுசெய்தனர் என்றும் இவ் வேளையில் இவர்கள் இருவரும் தற்கொலை செய்துகொள்ள முயற் சித்தனர் என்றும் தெரிவித்தார். (க-7)

# இராசி பலன்

**28.04.2006**

**(சித்திரை 15, வெள்ளிக்கிழமை)**

**அமாவாசை பின்னிரவு 1.42 மணிவரை**

**அச்சுவினி பின்னிரவு 1.23 மணிவரை**

**இராகுகாலம் 1.29-2.59மணிவரை**

**சுபநேரம் 7.29-8.59 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | செல்வாக்கு, நல்லமுயற்சி, போசன சுகம், பெரியோர் உதவி. |
| இடபம் | காரிய அலைச்சல், நிலைமாற்றம், மனச் சோர்வு, சிந்தனை மிகுதி. |
| மிதுனம் | தர்மம், நல்ல காரியம், விருந்துபசாரம், பெருமையடைதல். |
| கடகம் | சகோதரர் உதவி, அதிகாரம், உற்சாகம், தெய்வ நம்பிக்கை. |
| சிங்கம் | நிர்ப்பந்திக்கப்படல், தேசாந்திரவாசம், சரீரப் பிரயாசை, காரிய தாமதம். |
| கன்னி | கலகம், காரிய தடங்கல், வேலைச் சுமை, ஆரோக்கியக் குறைவு. |
| துலாம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய சிந்தை, விருந்துபசாரம், தெய்வசிந்தை. |
| விருச்சிகம் | தேகநலன், நண்பர்கள் சந்திப்பு, பிரயாணம், மாதர்நட்பு. |
| தனுசு | சகோதரர் உதவி, சொத்துப் பிணக்கு, அமைதிக்குறைவு, ரோகநிலை. |
| மகரம் | தொழில் ஆர்வம், முயற்சி தாமதம், சுப செலவு, வாக்குமேன்மை. |
| கும்பம் | கூட்டு முயற்சி, சுபசெய்தி, பிரயாணம், போசனநன்மை. |
| மீனம் | மனச்சோர்வு, கௌரவக்குறைவு, எதிர் பாராத நன்மை, பண விரயம். |

- வளவன்

# மோட்டார் சைக்கிள் பயணி மீது துப்பாக்கிச்சூடு

நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் திருநெல்வேலிச் சந்தியில் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோ கத்தை மேற்கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சூட்டுக்காயங்களுடன் தப்பிச்சென்று விட்டதாகத் தெரிகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்காயத்திலிருந்து சிந்திய இரத்தக்கறை அடையாளத்தைத் தொடர்ந்து இராணுவம் அவரைத் துரத்திச் சென்றபோதிலும் அவரைப் பிடிக்க முடியாமல் போய்விட்டதாகக் கூறப் படுகிறது. (து)

## வடக்கு-கிழக்கு மாகாணத்தில்

# எயிட்ஸ் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத் தில் தற்போது மேற் கொள்ளப்பட்டுவரும் எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்பூட்டல் நடவடிக்கைகள் மேலும் விஸ்தரிக்கப் படவுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் டாக்டர் எஸ்.குமாரவேல்பிள்ளை தெரிவித் துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணத்தின் எட்டு மாவட் டங்களிலும் எச்.ஐ. வி.மற்றும் எயிட்ஸ்நோய்தொடர்பாகபொதுமக்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் தற்போது முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக இளைஞர், யுவதிகள், பாடசாலை உயர் வகுப்பு மாணவர்கள், வெளிநாடுகளிலிருந்து வருகை தருவோர் ஆகியோர் மீது விசேட கவனம் செலுத்தப் பட்டு வருகின்றது.

எயிட்ஸ் நோய் பரவும் வழிமுறைகள் பற்றியும், அதனால் ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாகவும் பொது மக்களுக்கு மேலும் இலகுவாக விளக்க மூட்டும் நோக்கத்துடன் தமிழ் மொழி மூலமான குறுந் திரைப் படம் ஒன்றினை தயாரித்து வெளியிடும் நடவடிக்கை களை வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இந்த எயிட்ஸ் நோய் தொடர் பான விழிப்புணர்வை கருவாகக் கொண்டு சுமார் 30 தொடக்கம் 45 நிமிட நேரங்களைக் கொண்டதாக இந்த குறுந்திரைப் படம் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)







நேற்று முன்தினம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தந்தை செல்வாவின் நினைவுப் பேருரை நிகழ்வின் போது யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மங்கள விளக்கேற்றி தந்தையின் படத்துக்கு மலர் மாலை அணிவிப்பதையும், அறக் கட்டளை யின் செயலாளர் எஸ்.குலநாயகம் வரவேற்புரை நிகழ்த்துவதையும், பேராசிரியரும் அரசியல் விமர்சகரு மான சக்திவேல் பாலகிருஷ்ணன் நினைவுப் பேருரை நிகழ்த்துவதை யும் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் படங்களில்காண லாம். (படங்கள்:- திலீவின்பன்)



# அட பருபாவி மனுஷன் உயிர் பிழைச்சிட்டாரே!

## கவலை கொள்கிறது ஜே.வி.பி

கொழும்பு இராணுவத்தலைமைய கத்தில் கடந்த 26 ஆம் திகதி நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் படைத் தரப்பில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கர்ப்பவதி போல வந்த தற்கொலைக் குண்டுதாரிப் பெண்ணொருவரே இத் தாக்குதலை நடத்தியதாக படைத் தரப்பி னர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத் தப்பட்டால் அது யுத்தநிறுத்த மீறல் என் பதை நிரூபிப்பதும் அதனூடாக சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்தியலை ஏற்படுத்துவதும் இராணு வத்தின் இலக்கு.

அந்த இலக்கை அடைவதற்கு இராணு வத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன் சேகா மீதான தாக்குதலை, விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரியே நடத்தினார் என நிரூபித்தாக வேண்டும்.

அதேவேளை அவ்வாறானதொரு நிரூபித்தலுக்கு ஏற்றவாறான சோடிப்பு களைத் தயாரிப்பதில் படையினருக்கு அபார அனுபவம் உண்டு. இதற்காக தாக்கு தலை நடத்திய குண்டுதாரி தங்கியிருந்த வீட்டு உரிமையாளர் என்ற அடையாளப் படுத்தலிலும், தற்கொலைக் குண்டுதா ரிக்குத் தகவல் கொடுத்தார் என்ற அடிப் படையிலும் கொழும்பில் உள்ள அப்பா வித் தமிழர்கள் சிலர் கைது செய்யப்படு வதும், சிறையில் அடைக்கப்படுவதும் நடக்கப்போகும் கார்ரியங்கள்.


விமல் வீரவன்ஸ

யாருக்குக் காலம் பிழைத்துள்ளதோ அவர்கள் தாக்குதலின் பெயரால் சிறை வாசம் அனுபவிக்கும் பேற்றைப் பெறுவர்.

### தாக்குதலுக்கு உரிமை கோரல்

இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா மீதான தாக்குதலுக் கும் தமக்கும் எதுவித தொடர்புமில்லை யென தமிழீழ விடுதலைப்புலிகள் நிறுதிட்ட மாக அறிவித்துள்ளனர். அதேநேரம் இரா ணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் யுத்தநிறுத்த உடன் படிக்கையை மீறும் செயல் எனக் கடிந் துள்ளனர்.

## குருஷேத்திரம்

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, இத் தாக்குதலை விடுதலைப்புலிகள் தான் செய்தார்கள் எனக் கூறமுடியாதெனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை இராணுவத்தளபதி சரத் பொன்சேகா மீதான தாக்குதலுக்கு உயர் பாதுகாப்பு வலய மக்கள் படை உரிமை கோரியதாக வெப்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நேரத்திற்கு நேரம் அதிரடியான தகவல் களைத் தந்து சனத்தின் இதயவறை களின் சுருக்க விரிவுக்குத் தடைபோடும் இணையத் தளங்களின் செய்திகள் எத் துணை தூரம் நம்பத் தகுந்தவை என்ற ஆய்வுகளுக்கப்பால் 'உயர்பாதுகாப்பு வலய மக்கள் படை' என்ற அமைப்பு உரிமை கோரியதென்னும் தகவலை பத் தோடு பதினொன்றாக விட்டுவிடமுடியாது. ஏனெனில், வடபகுதியிலுள்ள உயர்பாது காப்பு வலயத்தில் மக்கள் குடியிருப்பதற் குத் தடை விதித்து வந்தவர் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, திருமதி சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிப தியாக இருந்தபோது இராணுவத் தளபதி,


சரத்பொன்சேகா

அனுமதித்தால் உயர்பாதுகாப்பு வலயத் தில் மக்களைக் குடியிருக்க அனுமதிக் கலாம் என அறிவித்திருந்தார்.

ஆனால் உயர் பாதுகாப்பு வலயத் தில் குடியமர்த்துதல் என்ற பேச்சிற்கே இட மில்லையென சரத்பொன்சேகா வெட் டொன்று துண்டு இரண்டாகக் கூறிவிட் டார்.

இவ்விதம் அவர் கூறியதற்கும் இப் போது அவர் மீதான தாக்குதலுக்கு உரிமை கோரிய படைக்குமிடையே ஓர் பரார்த்த வினைத்தொடர்பு இருப்பதுபோலவே தெரிகிறது.

### ஏ-9 பாதை மூடப்பட்டது

நாய்க்கு எங்கு அடிபட்டாலும் அது காலைத் தூக்குவது போல, படைத்தரப் பிற்கும் ஒரு வழமை உண்டு. அதாவது எங்கு தாக்குதல் நடந்தாலும் உடனடியாக ஏ-9 பாதையை மூடுவது தான் அந்தப் பழக்கம்.

ஏ-9 பாதையைத் திறப்பதில் அன்று முதல் இன்று வரை படைத்தரப்பிற்கு உடன் பாடு இல்லை. விரும்பியோ விரும்பா மலோ 2002 ஆம் ஆண்டு ரணில் விக்கிர மசிங்க விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் செய்துகொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம்


தற்கொலைத் தாக்குதல் மேற்கொண்ட பெண்ணின் கால்பகுதி

ஏ-9 பாதையை திறக்க வேண்டியதா யிற்று.

ஏ-9 பாதை திறப்போடு, ஏற்கனவே நடைமுறையிலிருந்த பொருளாதார தடை யும் பகலவனைக் கண்ட பனித்துளிகள் போல பரகதி அடைந்தது.

2002 ஆம் ஆண்டு செய்துகொள் ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை காரணமாக ஏ-9 பாதை திறக்கப்பட்டா லும், அதனை மூடிவிடவேண்டுமென் பதில் படைத்தரப்பு உறுதியாகவே இருக் கிறது.

அந்த வகையிலேயே கொழும்பில் குண்டு வெடித்ததும் ஏ-9 பாதை மூடப்பட் டது.

### ஏ-9க்கும் தாக்குதலுக்கும் என்ன தொடர்பு?

கொழும்பு இராணுவத் தலைமையகத் தில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடந்ததும் ஏ-9 பாதையை ஏன் மூட வேண்டும்? இந்தக் கேள்வி தமிழ் மக் களின் ஆழ்மனதை அரித்துக்கொண்டே இருக்கிறது.

தற்கொலைக் குண்டுதாரி ஒரு சில தினங்களுக்கு முன்னர் தான் ஏ-9 பாதை யால் கொழும்புக்குச் சென்றுள்ளார். அவ ரோடு தொடர்புடையவர்கள் ஏ-9 பாதை யால் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக் குத் தப்பிச் சென்றுவிட முடியும். இவ்வா றான காரணங்களை முன்வைத்தே ஏ-9 பாதையை பாதுகாப்பு அமைச்சு மூடிவிட் டது.

### ஜே.வி.பிக்கு கவலை

தற்கொலைக் குண்டுதாரியின் தாக்கு

## ஏ-9 திருக்கதவு பூட்டப்பட்டது ஏன்?

தலின் போது இராணுவத் தளபதி சரத் பொன்சேகா படு காயத்துடன் உயிர்பிழைத்துக் கொண்டமையால், தாக்கு தலை நடத்தியவர்களை விட அதிகூடிய கவலை ஜே.வி. பிக்கே ஏற்பட்டது.


ஏ-9 பாதை

ஏனெனில் இராணுவத் தளபதி உயிரிழந்தால் அத னைச் சாட்டாக வைத்து தென்னிலங்கை யில் ஓர் இன வன்முறையை ஆரம்பித்து தமிழ்மக்கள் மீது தாக்குதலை நடத்த லாம் என்பதே ஜே.வி.பியின் இலக்கு. ஆனால் அது சரிவராமல் போனதுதான் அவர்களுக்கு வருத்தம்.

ஜே.வி.பியின் இரட்டைவேடத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நன்கு தெரிந்து வைத்திருந்ததன் காரணமாகவே தாக்குதல் நடந்த கையோடு ரூபவாஹி ணியில் தோன்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

அந்த உரையில் தன் மீதும் அரசாங் கத்தின் மீதும் நம்பிக்கை கொள்ளுங் கள் அமைதியைக் கடைப்பிடியுங்கள்


மஹிந்த ராஜபக்ஷ

எனக் கேட்டுக்கொண்டார்.

ஆக, இரணுவத் தளபதி சரத்பொன் சேகா உயிர் பிழைத்துக்கொண்டமை யும், ஜனாதிபதியின் அதிரடியான உரையும் வன் செயலை தூண்டிவிடும் ஜே.வி.பியின் கபடத்தனம் அரங்கேறாமல் போயிற்று.

ஆனால் அது வெறும் சாட்டுப் போக் கேயன்றி, உண்மையான காரணமல்ல.

மாறாக ஏ - 9 பாதை திறப்பதற்கு முன் னர் வடபகுதிக்கான பொருளாதாரத்தடை அமுலில் இருந்தது.

பொருளாதாரத்தடை அமுலில் இருந்த போது வடபகுதிக்கு எந்தப் பொருளை எடுத்து வருவதாயினும், பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றாக வேண்டும்.

இவ்வாறு வடபகுதிக்குப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கான அனுமதியை வழங்கும் நடைமுறையில் படைத்தள பதிகளும், அதிகாரிகளும் ஏகப்பட்ட வருமா னத்தை உழைத்துக்கொண்டனர்.

இந்த உழைப்பை அனுபவித்த தளப

## விதுரன்

திகளும் அதிகாரிகளும், மீண்டும் ஏ-9 பாதை மூடப்பட்டு, பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறும் முறைமை வரவேண்டு மென விரும்புகின்றனர்.

அதன் காரணமாகவே, கொழும்பில் நடந்த குண்டுத்தாக்குதலை அடுத்து ஏ-9 பாதையை மூடிவிடுமாறு பாதுகாப்பு அமைச்சு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் திற்கு அறிவித்தது.

### தாக்கினால் மூடுவோம்

கொழும்பில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலோடு ஏ-9 பாதை மூடப்பட்ட நடவடிக்கைக்குப் பின்னால் ஓர் எச்சரிக்கை தகவல் இருப்பதை மறுப்பதற்கில்லை. அதாவது கொழும்பில் அல்லது யாழ். குடா நாட்டில் படையினருக்கு எதிரான தாக்கு தல் நடந்தால் ஏ-9 பாதை மூடப்படும் என் பதை எடுத்துக்காட்டுவதற்கான ஓர் பூர்வாங்க நடவடிக்கையாகவே ஏ-9 பாதை மூடப்பட்ட தைக் கருதவேண்டும்.

எதுவாயினும் ஏ-9 பாதை நிரந்தர மாக மூடப்படுமானால் அதனால் பொரு ளாதார நெருக்கடியை தமிழ் மக்கள் எதிர் நோக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

## இன்று ஒரு தகவல்

# பேராசை

அள்ள. அள்ளக்குறையாதது அட்சயபாத்திரம் அது நமக்குத் தெரியும். ஆனால் போடப்போட நிரம்பாத ஒரு பாத்திரம் உண்டு. அது என்ன தெரியுமா? நம்மில் பல பேரிடம் அந்தப் பாத்திரம் உண்டு அது தான் 'பேராசை' என்ற பாத்திரம். அதை நிறைவு செய்யவே முடியாது.

பேராசையைப் பற்றி சூ∴பி இலக்கியத்தில் ஒரு பிரபல மான கதை உண்டாம். அதை ஒரு பெரியவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஒரு மன்னர் நகர் வலம் போய்க் கொண்டிருக்கிறார். ஒரு பிச்சைக்காரன் மன்னரின் எதிரில் வந்து பிச்சை கொடுங்கள் என்றான். என்னுடைய அமைதி யைக் கெடுக்காதே போ என்றார் மன்னர். அவன் சிரித் தான். "அரசே! உங்கள் அமைதி கெடக்கூடிய நிலையில் இருந்தால் அதற்குப் பெயர் அமைதியே கிடையாது" என்றான்.எதிரில் நிற்பது வெறும் பிச்சைக்காரன் இல்லை யோகி என்பதை மன்னர் புரிந்துகொண்டார். துறவியே! உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் கேளுங்கள் கொடுக்கிறேன் என்றார். அந்தத் துறவி மீண்டும் சிரித்தார். " அரசே! உங்களால் முடியாததை எல்லாம் கொடுக்கமுடியும் என்று சபதம் செய்யாதீர்கள்" என்றார். மன்னருக்குக் கோபம் வந்துவிட்டது. என்ன இவர் இப்படிச் சொல்கிறார் என்று நினைத்தார். நகர்வலத்தை பாதியில் நிறுத்தினார். "வாருங்கள் அரண்மனைக்கு" என்றார். துறவியை அழைத்துக்கொண்டு அரண்மனைக்கு வந்தார்.

துறவி தன்னிடமிருந்த பிச்சைப்பாத்திரத்தை நீட்டினார். இதில் எனக்குப் பொற்காசுகள் வேண்டும் என்றார். பூ இவ்வளவுதானா என்று சொல்லிக்கொண்டே கையைத் தட்டி னார் மன்னர். ஒரு பெரிய தாம்பாளம் நிறைய பொற்காசுகள் வந்து சேர்ந்தது. அதை அள்ளிப் போட்டார். போடப் போட அந்தப் பிச்சைப் பாத்திரம் பொற்காசுகள் அத்தனையை யும் உள்வாங்கிக்கொண்டே இருக்கிறது. அரசாங்கக் கஜானாவே காலியாகிவிட்டது. மூட்டை மூட்டையாக பொற் காசுகளைக் கொட்டியாகிவிட்டது. அது விழுங்கிக் கொண்டே இருந்தது. கடைசிவரை அந்தப் பிச்சைப் பாத்திரம் நிரம்பவே இல்லை. அரசரிடமிருந்த கர்வம் போய்விட்டது.

அப்படியே பொத்தென்று துறவியின் காலில் விழுந் தார். அப்போது அந்தத் துறவி சொன்னாராம் மன்னர் இந்தப் பிச்சைப் பாத்திரத்தை உங்களால் மட்டுமில்லை வேறு யாராலும் நிரப்பமுடியாது. அதற்கு என்ன காரணம் என்றால் இது சாதாரண பிச்சைப்பாத்திரமில்லை. பேராசை களுடன் வாழ்ந்து செத்துப்போன ஒரு மனிதனின் மண்டை ஓடு இது என்றாராம். இதுதான் அந்த சூ∴பி இலக்கியக் கதை.

செத்த பின்பும் நிறைவு இல்லை என்றால் அது எப்படிப் பட்டபேராசையாக இருக்கும் என்று யோசித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். நமது ஆள் ஒருவர் கல்யாணம் செய்யப் பெண் பார்த்துக்கொண்டிருந்தார். அழகு, அறிவு, படிப்பு எதுவும் தேவை இல்லை பணம் மட்டும் இருந்தால் போதும் என்று பார்க்கிறவர்களிடம் எல்லாம் சொல்லிவைத்தார்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் ஒரு பணக்காரர் கிடைத் தார். அவர் சொன்னார் "இதோ பாருங்கள்... எனக்கு 20 வயதில் ஒருமகள்...அவளை நீங்கள் திருமணம் செய் தால் 2 இலட்சம் கொடுப்பேன். 25 வயதில் ஒரு மகள் இருக்கிறாள். அவளைத் திருமணம் செய்தால் 2½ இலட்சம் தருவேன்.

30 வயதில் ஒரு மகள் இருக்கிறாள். அவளைத் திருமணம் செய்தால் 3 இலட்சம் தருவேன் என்ன சொல்கிறாய்?" என்றார்.இவன் கொஞ்சநேரம் யோசித் தான். அதன்பின் அவரை நிமிர்ந்து பார்த்தான். "ஏன் சார் உங்களிடம் 50 வயதில் மகள் இல்லையா?" என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புலிகள் மீது தாக்குதலும் தொடரும்! யுத்த நிறுத்தமும் தொடரும்!!

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது பாதுகாப் புப் படையினர் தாக்குதல் நடத்தினாலும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா இதனைத் தெரிவித்தார்.

நோர்வே அரசாங்கமும் போர் நிறுத்த கண்காணிப் புக் குழுவினரும் தமிழீழ விடுதலைப்புலிகளை பேச்சு வார்த்தை மேசைக்கு கொண்டுவருவார்கள் என அர சாங்கம் நம்புகிறது என அவர் கூறினார். இக்கூட்டத் தில் பங்கேற்ற இராணுவப் பேச்சாளர்பிரசாத் சமரசிங்க கூறியதாவது,

திருகோணமலையில் நேற்று முன்தினம் மாலை கடற்படையினர் மீது விடுதலைப் புலிகளின் படகுகள் தாக்குதல்களை நடத்தியதாலும் சம்பூர்க் கடற்கரைப் பகுதியில் இருந்து துப்பாக்கிச்சூடுகள் நடத்தப்பட்டதா லுமே பாதுகாப்பு நடவடிக்கையாக விடுதலைப் புலி களின் தெரிவு செய்யப்பட்ட இலக்குகள் மீது கடற்படை தாக்குதல்களை நடத்தியது. கடற்படையினரின் உதவிக்கு விமானப் படையினரும் தாக்குதல்களை நடத்தியதா கக் கூறினார்.

இதேவேளை, ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் கேகலிய ரம்புக்வெல இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில்,

சம்பூர்ப் பிரதேசத்தில் பொதுமக்கள் பலியாகி இருப் பதாக கூறும் இடங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட் டில் உள்ளன.

அந்த இடங்களுக்கு நாங்கள் செல்வதற்கு விடுதலைப் புலிகள் அனுமதியளிக்கமாட்டார்கள் நீதிபதியும் பொலி ஸாரும் அந்த இடங்களுக்குச் செல்வதற்கு விடுதலைப் புலிகள் அனுமதியளிப்பார்களாயின் விசாரணைகளை மேற்கொள்ள முடியும் என்றார்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல் தொடருமா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள் விக்கு பதிலளித்த அமைச்சர் ரம்புக்வெல விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலுக்கு பதிலளிக்கும் வகையி லேயே தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் விடுதலைப் புலிகள் தாக்குதலை நிறுத்தினால் தாங்களும் தாக்கு தலை நிறுத்துவோம் என்றும் அவர்கள் தாக்குதலைத் தொடர்ந்தால் நாங்களும் திருப்பித் தாக்குவோம் என்றும் கூறினார்.

இராணுவப்புலனாய்வாளர்களின் தகவல்களை ஆராய்ந்த பின்னரே விடுதலைப் புலிகளின் தெரிவு செய் யப்பட்ட இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் இலக்குகளை அறிந்துகொள்வ தற்கு இராணுவத்திடமிருக்கும் நவீன தொழில்நுட்பத் தைப் பயன்படுத்தி அவர்களின் இலக்குகளை அடை யாளம்கண்டே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டனவே தவிர தமிழ் மக்களை இலக்கு வைத்து இந்தத் தாக்கு தல்கள் நடத்தப்படவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (க)

## சிறுவர் இல்லங்களை பராமரிக்க போதியளவு அதிகாரிகள் இல்லை

மாகாண சமூக சேவைகள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 168 சிறுவர் இல் லங்கள் செயற்படுவதாகவும் இவற்றில் 8500 சிறார் கள் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள் எனவும் இந் நிலை யங்களை கண்காணிக்கவும் பராமரிக்கவும் அதிகாரி களின் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவுள்ள தாகவும் மாகாண சமூக சேவைகள் ஆணையாளர் திருமதி ந. ரஞ்சனி தெரி வித்தார்.

இம்மாகாணத்தில் இயங்கும் சிறுவர் இல்லங்களில் 95ற்கும் மேற்பட்டவை பதிவு செய்யப்படாமல் இயங்கி வருகின்றன.

இவற்றில் பல நிலையங்கள் இராணுவக் கட்டுப் பாடற்ற பிரதேசத்தில் இயங்கி வருகின்றனர்.

இம் மாகாணத்தில் 78 சிறுவர் பராமரிப்பு பிரிவுகள் இயங்குகின்ற போதிலும் இவற்றைக் கண்காணிக்க 16 அதிகாரிகள் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர்.

ஒரு அதிகாரி ஆறு முதல் ஏழு வரையான பிரிவுக ளைக் கவனித்து வருகின்றார். இதனால் முறையான கண்காணிப்பினை செலுத்த முடியாதுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சுனாமி அனர்த்தம் காரணமாக 841 குழந்தைகள் அநாதைகளாகியுள்ளதுடன் 2ஆயி ரத்து 580 குழந்தைகள் பெற்றோரில் ஒருவரை இழந்து நிர்க்கதியாகியுள்ளனர்.

இவர்களை முறையாக பராமரிப்பதற்கு திணைக் களத்தினால் முடியாத நிலையில் யுனிசெப், சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் என்பன அவர்களை பராமரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (க-7)

## யாழ். மாவட்டத்தில் புதிய இன வெங்காயம் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் காலநிலைக்கு ஏற்ற குறுகிய காலத்தில் பாதிப்புக்கள் இன்றி அதிக விளைச்சலைத் தரக்கூடிய புதிய இன சின்ன வெங்காயம், வேதாள வெங் காயம் மற்றும் கீரை இனங்களை யாழ். மாவட்ட விவசாய ஆராய்ச்சி நிலையம் உற்பத்தி செய்து வியாபாரிகளுக்கு விற்பனை செய்து வருகின்றது.

சின்ன வெங்காயம் ஏ.ஆர்.எஸ்.ஒன்று, ஏ.ஆர். எஸ்.இரண்டு, வேதாளவெங்காயம் ஏ.ஆர்.எஸ். மூன்று, ஏ.ஆர்.எஸ்.பத்து, கீரை ஜே.ஆர்.ஏ.ஏ.303, ஜே.ஏ.ஏ. 304 என்பன புதிய கலப்பினங்களாகும்.

இதை யாழ். மாவட்ட விவசாய ஆராய்ச்சி நிலையத்தி னால் புதிய இனங்களாக யாழ். மாவட்டத்தில் பயிரிடும் வகையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

இப் புதிய இனங்களை ஆராய்ச்சி நிலையத்தில் பெற் றுப் பயன்படுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## மின்சாரம் இல்லை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கரம்பன் சண்முகநாதன் வித்தியா லயத்திற்கு அருகாமையில் உள்ள கரம்பன் மேற்குப் பகுதி மக்களுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்பட வில்லை யெனவும் எனவே குறித்த பகுதிக்கு விரைவில் மின்சாரத்தைப் பெற்றுத்தருமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளனர். (க-72)

## பாதை திறந்ததும் மக்கள் பரபரப்பு

கடந்த சில தினங்களாக மூடப்பட்டிருந்த 'ஏ9' பாதை நேற்றுக் காலை மீளத் திறக்கப்பட்டு விட்டாதான செய்தி அடிபடத் தொடங்கியதும் யாழ்ப் பாணத்தில் பரபரப்பான ஒரு சூழ்நிலை ஏற்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

'ஏ9' பாதை திடீரென மூடப்பட்டதால் கொழும்பு செல்லும் வகை தெரி யாது தவித்துக்கொண்டிருந்தவர்கள் பாதை மீளத் திறக்கப்பட்ட செய்தி யைக் கேள்விப்பட்டதும் பரபரப்புடன் பிரயாண ஒழுங்குகளை மேற்கொண் டதுடன் பிரயாணம் செய்வதற்கான வாகன வசதியைத் தேடி அலைந்த தையும் காணக்கூடியதாக இருந்தது. எப்படியும் கொழும்பு போய்ச் சேர்ந்து விடவேண்டுமென்ற ஆர்வத்தில் சிலர் கூட்டாகச் சேர்ந்து தனியார் வாகனங் களை ஒழுங்கு செய்யும் முயற்சியிலும் ஈடுபட்டிருந்தனர். (கு)

## நியமனம்

(பருத்தித்துறை)

யாழ்.செலயக தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபர் வே. வீரபத்திரபிள்ளை வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அண்மையில் ஸ்ரீலங்கா நிர்வாக சேவை நியமனம் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் எஸ். ஜெயசீலன் காரைநகர் உதவி அரசாங்க அதிபராக இட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். (க-52)

# புலிகளையும், அரசையும் பேச்சுமேசைக்கு அழைக்க சர்வதேச தலையீடு அவசியம்!

## க.கா.குழுப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளையும் அரசாங்கத் தரப்பினரையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்து வர சர்வதேச தலையீடு அவசியம் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்துள் ளார்.

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குண்டுத்தாக்குதலை அடுத்தே இரு தரப்பிற்கும் இடை யே பாரிய முறுகல் நிலை ஏற்பட் டுள்ளது.

எனினும் இருதரப்பிற்கும் இடையில் பேச்சுவார்த் தைகளை ஆரம்பிக்க முடியுமென்று ஓரளவு நம்பிக்கை தமக்கு இருப்பதாக அவர் குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை, கடந்த செவ்வாய்க்கிழமை கொழும் பில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலையடுத்து இலங் கையில் தங்கியுள்ள நோர்வேயின் சமாதானத் தூதுவர் அரசாங்கத் தரப்புடன் பேச்சுக்களை நடத்தியுள்ளதாக நோர்வேத் தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எனினும், அவர் யாருடன் பேச்சுவார்த்தை நடத் தினார் என்ற விடயத்தை அவர் தெரிவிக்கவில்லை. இதற்கிடையில் கொழும்பில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை அமெரிக்கா கண்டிப்பதாக அதன் தூத ரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வன்முறைகளின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது. இந்த நிலையில் இருதரப்பும் பேச்சு வார்த்தைகளுக்கு முன் வரவேண்டுமென்று அவர் வலியு றுத்தியுள்ளார். (க-9)

## விபரங்களை சமர்ப்பிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப் பத்திரத்தின் இணைப்பிரதி பெறுதல் (Duplicate Driving Licence) சாரதி அனுமதிப்பத் திரத்தை புதுப்பித்தல்(Renewal of Driving Licence) சாரதி அனுமதிப்பத்திர புத்தகங்களை கணனி மயப்படுத்தப்பட்ட அட்டைகளாக மாற்றுதல் (Card Driving Licence) ஆகியவற்றுக்கு விண்ணப்பம் செய்து ஒருவருடத்திற்கு மேலாகியும் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கை கள் எடுக்கப்படவுள்ளது.

இதனால் சம்பந்தப்பட்டவர்கள் தாம் விண்ணப்பம் செய்த உரிய பிரதேச செயலகங்கள் /உதவி அரசாங்க அதிபர் பணிமனையுடன் உடன்நேரில் தொடர்பு கொண்டு உரிய விபரங்களை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் மோட் டார் போக்குவரத்து திணைக்களம் உதவி ஆணையா ளர் வி.பத்மநாதன் கேட்டுள்ளார். (க)

# சோதனைக்குழுக்கள் அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

வேலைத்தளங்களில் நிலவும் துன்புறுத்தல்களைக் கண்டறிவதற்காக சோதனைக்குழுக்களை அமைப்பதென சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தியமைச்சு முடிவு செய்துள்ளது.

இத்தகைய இம்சைபடுத்தல்கள் பற்றி அதிகம் முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக அமைச்சர் சுமிதா –ஜெயசேன தெரிவித்துள்ளார். குறிப்பாக அரச நிறுவனங்களில் நிலவும் துன்புறுத்தல்கள் பற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு சோதனைக் குழுக்கள் நியமிக்கப்படும்.

குழுக்களில் இடம்பெறுவோருக்கு மனித உரிமை ஆணைக்குழுவின் மூலம் விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# கதிர்காமர் வழக்கு ஒருவருக்கு பிணை

(கொழும்பு)

கதிர்காமர் வழக்கில் கடும் நிபந்தனைகளுடன் ஒருவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. கதிர்காமர் கொலையாளிகளுக்கு செல்லிடப்பேசி வழங்கியதாக காளி முத்து திருக்குமார் என்பவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

தனது கணவருக்கும் இந்தக் கொலைக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பதால் அவரை பிணையில் விடுவிக்க வேண்டும் என்று காளிமுத்துவின் மனைவி நந்தினி நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார். அதை விசாரித்த நீதிபதி திபாலி விஜேசுந்தர கடும்நிபந்தனைகளுடன் குறித்த நபருக்கு பிணை வழங்கினார். (க)

# சந்தையில் வாகனங்களை நிறுத்துவதற்கு தடைவிதிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சந்தையில் வாகனங்களை நிறுத்துவதற்குப் படையினர் தடைவிதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வாகனங்களில் கிளைமோர்க் குண்டுகள் பொருத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் காரணமாகவே படையினர் இத்தகைய தடையை விதித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவைதவிர சந்தையை அண்டிய பிரதான வீதிகளில் பெருமளவு இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதால் பொதுமக்கள் சந்தைக்குச் செல்ல அச்சம் தெரிவிக்கின்றனர் எனவும், இதனால் சந்தையில் வியாபாரிகளும் குறைவாகவே காணப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நகரிலுள்ள வர்த்தக நிலையங்களும் நண்பகல் 12மணியுடன் இழுத்து மூடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

# தடகளப் போட்டி

(கொழும்பு)

வேலணை பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான தடகளப்போட்டி இன்று பிற்பகல் 12.00 மணிக்கும் நாளை காலை 8.30 மணிக்கும் நயினாதீவு மகாவித்தியாலய மைதானத்தில் வேலணை உதவிப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட செயலக திட்டப்பணிப்பாளர் க.கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினராக நயினாதீவு மகாவித்தியாலய அதிபர் சொ.பகீரதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-9)

# சித்தன்கேணியில் பதற்றம்

சித்தன்கேணி பெரிய வளவைப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலின் போது இராணுவத்தினருக்கு எந்தவிதமான சேதமும் ஏற்படவில்லை என இராணுவதரப்பினர் தெரிவித்துள் ளனர். இதேவேளை இத்தாக்குதலை அடுத்து அவ்வீதிகளில் சென்று கொண்டிருந்த பொது மக்கள் மீது இராணுவத்தினர் கண்மூடித்தனமாக தாக்குதல் மேற்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் அப்பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டதுடன் அங்கு பெரும் பதற்றம் நிலவியது.

அத்துடன் அரச மற்றும் தனியார் பேருந்துகளில் பயணம் செய்த பொது மக்கள் அனைவரும் வாகனத்தில் இருந்து இறக்கப்பட்டு தீவிர சோதனையின் பின்னரே பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (க-15, 133)

# நோர்வே திரும்பினார் பௌயர்

(கொழும்பு)

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான நோர்வே சிறப்புத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் நேற்று முன்தினம் இலங்கையிலிருந்து நோர்வே திரும்பினார்.

ஜெனீவாப் பேச்சுக்கள் தொடர்பில் ஒழுங்குகளை மேற்கொள்ளவும் விடுதலைப்புலிகளின் தளபதிகளின் பயண ஒழுங்கு தொடர்பிலான பிரச்சினைக்குத் தீர்வு காணவும் கடந்த வாரம் அவர் இலங்கை வருகை தந்திருந்தார்.

இம்முயற்சிகளில் தீர்வு காணப்படாத நிலையில் தனது பயணத்தை நீடித்து கொழும்பில் அவர் தங்கியிருந்தார். அதன் பின்னர் நேற்று முன்தினம் நோர்வேக்கு அவர் புறப்பட்டுச் சென்றுள்ளார். (க)

# இனி எதற்கு யுத்த நிறுத்த ஒப்பந்தம்?

## இப்படிக் கேட்கிறது ஜே.வி.பி

(கொழும்பு)

அரசாங்கம் இனியும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிக்கத் தேவையில்லை என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது. கொழும்பு ஊடகவியலாளர் மாநாட்டில் ஜே.வி.பி.பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கலந்துகொண்டு பேசுகையில்,

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் கடைப்பிடித்து வருவதில்லை. இதனால் அரசாங்கம் இனியும் ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் தொங்கிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. இராணுவத் தளபதி மீது கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலை அரசாங்கமோ பொதுமக்களோ இலகுவாக எடுத்துக்கொள்ள முடியாது.

பேச்சுக்கள் மூலம் அமைதியை எட்ட முடியும் என்கிற நாகரிக வழி இருக்கின்ற போதும் தமிழீழ விடுதலைப் புலிகள் நீண்டகாலம் அமைதிப் பேச்சுக்களில் ஈடுபடமாட்டார்கள் என்ற உண்மையை அரசாங்கமும் மக்களும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

நம்மிடையேயான அனைத்து வேறுபாடுகளையும் மறந்து மிலேச்சத்தனமான பயங்கரவாதத்தை தோற்கடிக்க ஒன்றிணைய வேண்டிய தருணம் இது. நமது நாட்டின் பிரச்சினைக்கு சர்வதேச சமூகம் தீர்வுகாண முடியாது என்ற உண்மையை ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்ள வேண்டும்.

அரசாங்கம் நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடித்த போதும் விடுதலைப் புலிகளைபேச்சுமேசைக்குக் கொண்டுவர நோர்வே தவறிவிட்டது. தனது அனுசரணைப் பணியில் நோர்வே தோல்வியடைந்துவிட்டது. ஒரு முக்கியமான காலகட்டத்தில் செயற்பட நோர்வே தவறிவிட்டது. ஆகையால் அனுசரணையாளராக நோர்வே இருக்கத் தேவையில்லை.

இத்தகைய நிலையில் அரசாங்கத்துக்கு எதுவித நிபந்தனையுமற்ற ஆதரவை ஜே.வி.பி. அளிக்கிறது. இராணுவத்தினர் மீதும் பொதுமக்கள் மீதும் விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதையடுத்து சிங்கள மற்றும் தமிழ் மக்களிடையே யான பிளவை உருவாக்கும் புலிகளின் உத்திக்கு மக்கள் இணங்கிவிட வேண்டாம் என்றார். (க)

# சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மௌனித்தது கவலையைத் தருகிறது

## கிளி.மாவட்ட அரசசார்பற்ற இணையத்தலைவர்

மூடப்பட்ட பாதைகள் திறக்கப்பட்ட போதிலும் மக்கள் மீதான இராணுவக் கெடுபிடிகள் தொடர்வதானது எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற இணையத்தலைவர் கணேசபிள்ளை தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் இருந்து மக்கள் இடம்பெயர்கின்றமை குறித்து அவர் கருத்து தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். பாதைமூடப்பட்ட பின்னர் பாதையை திறப்பதற்கான முயற்சிகளை வன்னியில் இயங்கிய சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளாதது தமக்கு பெரும் கவலை அளிப்பதாக தெரிவித்த கணேசபிள்ளை தற்போது இடம்பெயர்ந்து வரும் மக்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதில் தமது இணையம் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில் தற்போது இடம்பெயர்ந்து வரும் மக்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கான உதவிகளை கிளிநொச்சியில் இயங்கிவரும் சில அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கோரியுள்ளதாக கணேசபிள்ளை கூறினார்.

நேற்று பாதை திறக்கப்பட்ட பின்னர் அதனூடாகப் பயணிக்கும் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட மக்கள் மீது இராணுவம் மேற்கொள்ளும் கெடுபிடிகளையும் தமது இணையம் கடுமையாக கண்டிப்பதாகவும் தெரிவித்தார். (க)

# ஒன்றுகூடல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

டானிஸ் செஞ்சிலுவைச் சங்கம் இலவசமாக அலுவலக பாவனைக்காக ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு துவிச்சக்கர வண்டியை அன்பளிப்பதற்கான ஒன்றுகூடல் கூட்டம் இன்று (வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

எனவே சம்பந்தப்பட்ட பிரிவுத் தலைவர் அல்லது செயலாளரை கூட்டத்திற்கு வருகை தந்து அதனைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (க)

# வடக்கு-கிழக்கு வீடமைப்பு புனர் நிர்மாணத் திட்டம் 2006

## கட்டம் II - யாழ்.மாவட்டம் பயனாளிகள் தெரிவு

வடக்கு-கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் 2006ஆம் ஆண்டில் கட்டம் IIனை நடைமுறைப்படுத்துவதற்காக 557 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு கிராமங்கள் பெற்ற கூடிய புள்ளிகள் அடிப்படையில் 103 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு பொதுமக்களின் பார்வைக்காக சகல பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்தியும் பொது இடங்களில் பார்வைக்காக விளம்பரப்படுத்தி இருந்தமையையும் அறிவீர்கள்.

தெரிவுசெய்யப்பட்ட 103 கிராமங்களிலும் உள்ள சகல குடியிருப்பாளர்களுக்கும், 25875 சேத அழிவு மதிப்பீட்டு படிவங்கள் வழங்கப்பட்டு, கிராமிய புனர்வாழ்வுக் குழுக்களின் உதவியுடன் பூரணப் படுத்தப்பட்டு, பிரதேச செயலகங்களில் கணனியில் தரவு நிரப்படுத்தப்பட்டு 4000 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

இப்படியாக தெரிவுசெய்யப்பட்ட 4000 பயனாளிகள் அவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். எனவே இப்படியாக தெரிவுசெய்யப்பட்டவர்கள் இத் திட்டத்தின் பிரமாணங்களுக்கு அமைவாக ஆவணங்களை சமர்ப்பித்தால் மாத்திரமே அவர்கள் தெரிவு செய்யப்பட்டவர்களாக கருதப்பட்டு அவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

1. தமது வீடுகள் யுத்தத்தால் பாதிப்படைந்தமையை உறுதிப்படுத்தும் ஆவணம்.
2. வீடு மீள் நிர்மாணம் செய்ய உத்தேசிக்கும் காணியின் சட்ட பூர்வமான ஆவணம்.
3. மாத வருமானம் 2500/=க்கு குறைவானது என உறுதிப்படுத்தும் கடிதம்.
4. இடம்பெயர்ந்த குடும்பத்தவர்கள் மீளவும் அக் காணியில் குடியேறியுள்ளார்கள் என்பதனை நிரூபிக்கும் கடிதம்.
5. அக்கிராமத்தில் நிரந்தரமாக வசிக்கும் வதிவிடச் சான்றிதழ்.

எனவே பொதுமக்களால் தெரிவிக்கப்படும் ஆட்சேபனைகள், முறைப்பாடுகள் என்பனவற்றை கவனத்தில் எடுத்து கிராம ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் விபரத்தினை கணனியின் மூலம் பெறப்பட்ட தரவினையும், விண்ணப்பதாரியினால் பூரணப்படுத்தப்பட்ட படிவத்தினையும் ஆராய்ந்து தவறுகள் இருப்பின் நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அப்படியாக மீள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மாற்றங்கள் ஏற்படுமிடத்து மீள் ஆய்வின் பின் தயாரிக்கப்பட்ட பட்டியலை எனக்கு அனுப்பி அனுமதி பெற்றபின் பொது இடங்களில் பொது மக்களின் பார்வைக்காக வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் உலக வங்கியினதும் வடக்கு-கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டத்தினதும் சுற்று நிருபங்களுக்கு அமைவாக தகைமையுடைய பயனாளிகளே தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள் என்பதனை நிச்சயப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*க.கணேஷ்*
*அரசாங்க அதிபர்,*
*யாழ்.மாவட்டம்.*

(C/311)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் யூன் மாதம் 4ஆம் திகதி யா.இராமநாதன் கல்லூரியில் மாவட்ட இணைப்பாளர் கே.நாகராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் 'பன்னிரு திருமுறைகளில் பண்ணும் அறநீதிக்கருத்துக்களும்' என்ற தலைப்பில் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை உரையாற்றுவார்.

'விரதங்களும் பண்டிகைகளும் சமய ஆத்மீக விழுமியங்களும்' எனும் தலைப்பில் சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் உரையாற்றுவார்.

'ஈழத்திலும் தமிழகத்திலும் சைவசமய வரலாறு' எனும் தலைப்பில் பேராசிரியர் வே.பாலகிருஷ்ண ஐயர் கருத்துரை வழங்குவார்.

'சித்தாந்த சாத்திரங்களில் முப்பொருள் உண்மை' பற்றி சைவப் புலவர் சு.செல்லத்துரையும் 'இந்து கோயிற் கலைகளும் சமய வாழ்வும்' பற்றி பாலசண்முகன் ஆகியோர் கருத்துரைகள் வழங்கவுள்ளனர். (சு-133,132)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆன்மீகச் சொற்பொழிவு இன்று மாலை 5.00 மணிக்கு சுதுமலை சாவக்காட்டு அறநெறிப் பாடசாலையில் இடம்பெறும்.

இந்நிகழ்வு இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'சிவத்தொண்டே பெரும்பேறு' என்னும் தலைப்பில் ஆசிரிய ஆலோசகர் சைவப்புலர் கந்தசத்தியதாசன் சிறப்பு சொற்பொழிவாற்றுவார்.

இதனைத்தொடர்ந்து சாவற்காட்டு அறநெறிப்பாடசாலை மாணவிகளின் பண்ணிசையும் இடம்பெறும். (சு-133)

## எதிர்பார்த்த அளவுக்கு நெல் விளைந்ததாம்

(கொழும்பு)

இம்முறை பெரும்போகத்தில் எதிர்பார்த்தளவு நெல் அறுவடையை பெறமுடிந்ததாக அமைச்சர் சமல்ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெரும்போக அறுவடை 22 இலட்சம் மெற்றிக்தொன்னை எட்டுகின்றது. இந்த அமோக விளைச்சலுக்கு அரசாங்கத்தின் உரமானியமே பிரதான காரணியாக அமைந்தது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இம்முறை பெரும்போகத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உரமானியத்தின் அளவும் அதிகரித்துள்ளது.

2005, 2006ஆம் ஆண்டு காலப் பகுதியில் விவசாயிகள் 2 இலட்சத்து 10 ஆயிரம் மெற்றிக் தொன் உரத்தை பெற்றுள்ளார்கள் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் முதலீடாகவே அரசாங்கம் உரமானியத்திட்டத்தை ஆரம்பித்தது.

புள்ளிவிபரங்கள் மூலம் அதன் பலாபலன்கள் தெரியவந்துள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (க-9)

## 3 மணியுடன் வெறிச்சோடும் ஊர்காவற்றுறை

(ஊர்காவற்றுறை)

கொழும்பில் இராணுவ தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற மனிதக் குண்டு வெடிப்பையடுத்து ஊர்காவற்றுறை பகுதியில் அசாதாரண சூழ்நிலை நிலவிவருகிறது.

அப்பிரதேசப் பகுதியில் பஸ் வண்டிகள் மற்றும் வாகனங்கள், சைக்கிள்கள் முதலியன இராணுவத்தினரின் கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுவதனால் வீதிகளில் மக்கள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்தே காணப்படுகிறது.

உணவகங்கள், கடைகள் என்பன பி.ப 3 மணிக்கே பூட்டப்படுவதுடன் மக்களும் வெளியே நடமாட அஞ்சி வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர். (து-72)

# சர்வதேச பாதுகாப்பு தினம்

உழைக்கும் வர்க்கத்தினர் உரிமைகளை அனுபவிப்பதற்காக நிறுவப்பட்டதே சர்வதேச தொழில் நிறுவனமாகும். மக்களின் வாழ்க்கையில் பாதுகாப்பு இன்றியமையாதது என்பதனால் அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஏப்ரல் 28ஆம் திகதியை சர்வதேச பாதுகாப்பு தினமாக சர்வதேச தொழில் நிறுவனம் பிரகடனப்படுத்தியுள்ளது.

தொழில் விபத்துக்களினால் முடமாகி வருமானத்தை இழந்தவர்கள் வருமானம் பெற்றுக்கொள்ளுதற்காக எமது நாட்டில் உத்தியோகம் சம்பந்தமான புனர்நிர்மாண வழிவகைகளை உருவாக்குவது அக்குடும்பங்களுக்கு ஒரு சிறந்த வரப்பிரசாதமாக அமையும். அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேடமாக வடிவமைக்கப்பட்ட கழிப்பறைகள், குளியலறைகளுடனான தங்குமிடங்களை நிர்மாணித்து வழங்கினால் அவர்களால் வேறொருவருடைய உதவியுமின்றி தமது அன்றாட வேலைகளை கவனிக்கக் கூடியதாக இருக்கும். அவர்களுக்கு ஏற்ற கைத் தொழில்களை ஆரம்பித்து அவர்களால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு சிறந்த சந்தைப்படுத்தல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்கள் அங்கவீனர்களானாலும் மனம் நிறைந்த வாழ்க்கையினை வாழ முடியும் எனத் தெரிவிக்கிறார் வட பிராந்திய மாவட்ட தொழிற்சாலை பரிசோதனைப் பொறியியலாளர் சி.மகேந்திரராஜன். (து)

### யுத்தத்துக்குத் தயாராகுங்கள்!

# ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஹெல உறுமய வேண்டுகோள்

விடுதலைப் புலிகளை உடனடியாகத் தடைசெய்து நாட்டை யுத்தத்திற்குத் தயார் நிலையில் வைத்து விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்தியுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் ஓமல்பே சோபித தேரர் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நாட்டின் பாதுகாப்பு எவ்வளவு அச்சுறுத்தலுக்கு இலக்காகியுள்ளதென்பதை கொழும்பு குண்டுவெடிப்புச் சம்பவம் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

யுத்தநிறுத்தஉடன்படிக்கையின்போர்வையில் விடுதலைப் புலிகள் அரசாங்கத்திற்கும் பாதுகாப்புப் படையினருக்கும் எதிரான ஒரு தலைப்பட்ச யுத்தத்தை ஆரம்பித்தது இன்று நேற்றல்ல. யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட நாளிலிருந்தே பாதுகாப்புப் படையினர், புலனாய்வுத்துறை அதிகாரிகள், இராஜதந்திரிகள், மாற்றுத் தமிழ்க்குழு உறுப்பினர்களைப் படுகொலை செய்துவந்துள்ளனர்.

கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் கடைப்பிடித்த நெகிழ்வுப் போக்கால் பாதுகாப்புப் படையினர் பலவீனமடைந்ததுடன் அவர்களின் மனோதைரியமும் குலைந்தது.

தற்போது விடுதலைப்புலிகள் நாட்டின் இராணுவத் தளபதியையே இலக்குவைத்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இனிமேலும் சமாதானத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகக் கூறி பொறுப்பைத் தட்டிக்கழிப்பதை விடுத்து விடுதலைப் புலிகளைத் தடைசெய்து நாட்டை யுத்தத்திற்கான தயார் நிலையில் வைத்து விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார். (க)

### வடகிழக்கு மாகாணத்திலுள்ள

# வைத்தியசாலைகளில் சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் கடந்த 15 வருடங்களாக சுத்திகரிப்பு தொழிலாளர்கள் நியமிக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

இதனால் இவ்வைத்தியசாலைகளின் பணிகளில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் மட்டும் 170க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் உள்ளன.

இவற்றை நிரப்புமாறு கடந்த 2000ஆம் ஆண்டு தொடக்கம் வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகின்றது. எனினும் இன்னமும் வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை.

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் தொண்டர்களாக பல வருடமாக கடமையாற்றுபவர்களில் இருந்து இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2003, 2004, 2005 ஆகிய வருடங்களில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்ட போதும் வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படவில்லை என சுட்டிக்காட்டப்படுகின்றன.

மாகாண சுகாதார அமைச்சின் இந்த அசமந்தப் போக்கு குறித்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோர் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

தொண்டர்களாகக் கடமையாற்றுபவர்களில் 98 வீதமானவர்கள் பெண்களாவர். எனவே பெண்களை அதிக அளவில் நியமித்தால் பணிகளில் மேலும் முடக்கம் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

காவலாளி போன்ற கடமைகளுக்கு மேலும் தட்டுப்பாடு நிலவ இடமேற்படும். ஏனெனில் தற்போது வைத்தியசாலை ஒன்றுக்கு 30 காவலாளிகளுக்கு தேவை உள்ள போதிலும் குறைந்த அளவினரே கடமையாற்றுகின்றனர்.

எனவே சிற்றூழியர் நியமன விடயத்தில் மாகாண சுகாதார அமைச்சு அசமந்தப் போக்கை கைவிட்டு உடனடியாக நியமனங்களை வழங்கவேண்டுமென்று நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியோர் கோருகின்றனர். (க-9)

# மின் உற்பத்தி நிலையங்களுக்கு பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை

நாட்டிலுள்ள அனைத்து மின் உற்பத்தி நிலையங்களுக்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜோன் செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

இந்த நிலையங்கள் சார்ந்ததாக விசேட பாதுகாப்புத் திட்டம் அமுலாகவுள்ளது என்றும் இதன்படி முன் அனுமதியின்றி மின் உற்பத்தி நிலையங்களை பார்வையிடுவதையோ அவற்றுக்கு அருகில் நடமாடுவதையோ தவிர்த்துக்கொள்ளுமாறும் பொது மக்களை அவர் கேட்டுள்ளார்.

மேலும் மின் உற்பத்தி நிலையங்கள் இயங்கும் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் இனந்தெரியாதோருக்கு புகலிடம் அளிக்கக்கூடாது என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-9)

## புதிய நிர்வாகிகள்

யாழ்.குருநகர் கிழக்கு முதியோர் சங்கத்தின் நடப்பு வருட புதிய நிர்வாகிகள் அண்மையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி தலைவராக சுவாம்பிள்ளை பெனடிக்றும், உபதலைவராக மோசஸ் எட்வேட்டும், செயலாளராக துரைச்சாமி மரியரெட்ணமும், பொருளாளராக கந்தையா யோகரட்ணமும் அத்துடன் செயற்குழு உறுப்பினர்களாக ஐந்துபேரும் தெரிவு செய்யப்பட் டுள்ளனர். (க-72)

## இலவச தேவார பண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றம் தேவாரப்பண்ணிசை மாமணி பட்டத்திற்கான இலவச தேவாரப் பண்ணிசை வகுப்புகளை யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 4.30 மணி முதல் நடாத்திவருகின்றது. விரும்பியவர்கள் இவ்வகுப்பில் பங்குபற்றிப் பயன்பெறலாம். (க)

## நிதி உதவி

(பருத்தித்துறை)

றிச்பீல்ட் ஜிம்னாசியம் ஸ்ரோட்பெக் கல்வி நிறுவனம் வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் ஊடாக சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட தாய் தந்தையர்களை இழந்த 50 மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கென 2 இலட்சத்து 78 ஆயிரத்து 970 ரூபாவை வழங்கியுள்ளது.

இந்நிதி உதவிகள் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் சிபார்சுக்கிணங்கவே வழங்கப்பட்டுள்ளது. (சு-52)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கான மூன்று மாதகால ஆசிரியர் பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்களைக் கோரும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இதற்கு இன்று வரை காலக்கெடு விதிக்கப்பட்டிருந்தது. இந்தக் காலக்கெடுவை அடுத்தமாதம் 5ஆம் திகதி வரை நீடித்துள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (க-9)

## சிவராமின் ஓராண்டு ஞாபகார்த்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் டி.சிவராமின் ஓராண்டு ஞாபகார்த்த நிகழ்வு இன்று பி.ப.4 மணிக்கு ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை அமைந்துள்ள ஊடகவியலாளர் பயிற்சி நிலையத்தில் இடம்பெறும்.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் ஏற்பாடுசெய்துள்ள இந்த நிகழ்வுக்கு சங்கத் தலைவர் சி.கதிர்காமத்தம்பி தலைமை தாங்குவார். (க)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பொறியிலாளர் சங்கத்தின் வடமாகாண நிலையத்தினர் நடாத்தும் சிறப்புக் கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00 மணிக்கு யாழ்.நாவலர் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் வர்த்தகத்தொழில்துறை மன்றத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

குடாநாட்டின் நீர்வள முகாமைத்துவம், தொண்டைமானாறு, உவர்நீர் தடுப்புத் திட்டம் இரணைமடு நீர் திட்டம் ஆகிய விடயங்கள் குறித்து இக்கலந்துரையாடலில் கலந்துரையாடப்படும். (க)

## செயலமர்வுகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10 – 11 ஆகியவற்றில் ஆங்கிலம், கணிதம், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமையும், நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் யா.இராமநாதன் கல்லூரியில் காலை 8.30 மணி முதல் பி.ப5.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இதேவேளை இம்மாதம் 1, 2, 8, 9 ஆம் திகதிகளில் நடைபெற்ற செயலமர்வுகளில் பங்கு பற்றியவர்கள் இந்தச் செயலமர்வுகளில் பங்குபற்றத் தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## 12 மணியுடன் வெறிச்சோடும் சாவகச்சேரி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சந்தை நண்பகல் 12 மணியுடன் வெறிச்சோடி காணப்படுவதாகவும் அங்குள்ள வர்த்தக நிலையங்கள் குறித்த நேரத்துக்கு முன்பாகவே மூடப்பட்டு விடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் சாவகச்சேரி பஸ் நிலையத்திலும் பி.ப3 மணிக்குப் பின்னர் பொதுமக்களின் நடமாட்டம் காணப்படுவதில்லை எனவும் கூறப்படுகின்றது. (க)

ஒவ்வொரு நாளும் சிறிய நன்மைகளுக்காக ஆன்மாவை விற்பதைத் தவிர வேறு என்ன செய்கின்றார்கள் மனிதர்கள்.

-பெர்னார்ட்ஷா

வலம்புரி

## அப்பாவிப் பொதுமக்களை வாட்டி வதைக்காதீர்கள்

நாட்டில் யுத்தம் ஆரம்பித்துவிட்டது போன்ற மன நிலை மக்களிடையே ஏற்பட்டுள்ளது. இதனால் அவர்கள் அதிர்ந்து போயுள்ளனர்.

யுத்தத்தின் வடுக்களைச் சுமந்து வக்கிரமடைந்துபோன மனதுடன் வாழ்க்கை நடத்தும் மக்கள் மீளவும் ஒரு யுத்தத்திற்கு முகம் கொடுக்க முடியாது முனகுகின்றனர்.

அதிலும் ஏ-9 பாதையை திடீரென மூடி விட்டதால் மக்கள் பட்ட துன்பம் சொல்லுந்தரமன்று. ஏ-9 பாதையை திடீரென மூடியதால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட பதற்றமும் குழப்பமும் மீளவும் பாதை திறக்கப்பட்டதால் தணிந்து போனது எனலாம்.

ஆயினும், யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கும்போது மூதூர்ப் பகுதியில் யுத்த விமானங்கள் குண்டுவீச்சு நடத்தியதால் அப்பாவிப் பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கும்போது அரச படையினர் விமானத் தாக்குதல் நடத்தியமை மிகக் பெரும் கொடூரமாகும்.

பொதுமக்களின் குடியிருப்புக்கள்மீது குண்டுத் தாக்குதல் நடத்தி அப்பாவிப் பொதுமக்களைக் கொலை செய்வதென்பது மன்னிக்க முடியாத குற்றம்.

கடந்த யுத்த காலத்தில் இதேபோன்று விமானக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தி அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களைப் பறித்த கொடூரம் நின்று போய்விட்டது என்ற உணர்நிலையில் மீண்டும் மூதூர்ப் பகுதியில் விமானக் குண்டுத் தாக்குதல் நடத்தியமை தமிழ் மக்களை வேற்று நாட்டு மக்களாகக் கருதும் தன்மையுடையதென்பதை சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கொழும்பில் குண்டுவெடித்ததும் மக்கள் அமைதி காக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்கள் மீதான குண்டுத் தாக்குதலுக்கு எங்ஙனம் அனுமதியளித்தார் என்பதே கேள்வி.

யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கும் போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் - பொதுமக்களின் குடியிருப்புக்கள்மீது யுத்த விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடத்துவதற்கு முன்னதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு அனுமதிபெறப்படவில்லையென ஜனாதிபதி கூறுவாராயின் படையினர் தனித்துச்செயற்படுகின்றார்கள் என்பது பொருளாகும்.

மாறாக விமானக் குண்டுத் தாக்குதலுக்கு ஜனாதிபதியே அனுமதியளித்தார் எனின் 'மகிந்த சிந்தனை' தமிழ் மக்களின் உயிருக்கும் சிந்தனையாகவேயிருக்கும்.

எதுவாயினும் இதுபோன்ற அநியாயமான தாக்குதல்கள் பொதுமக்கள்மீது நடத்தப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

# கொழும்பில் 12 பெண்கள் உட்பட 98 பேர் கைது!

(கொழும்பு)

கொழும்பில் உள்ள இராணுவத் தலைமையகக் குண்டு வெடிப்பில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 12 பெண்கள் உட்பட 98 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நேற்று முன்தினம் பாரிய சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பு குண்டுவெடிப்பில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 12 பெண்கள் உட்பட 98பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரதெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டோரில் சிங்களவர், தமிழ் மற்றும் முஸ்லிம்களும் அடங்குவர். மேலும் குண்டுத் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படும் பெண்ணை தங்க வைத்ததாகக் கூறி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

டாம் வீதியில் உள்ள ஒரு தங்கும் விடுதியில் அப்பெண் தங்கியிருந்ததாகக் கூறி அதன் முகாமையாளர் கைதுசெய்யப்பட்டிருப்பதாக தேசிய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அப்பெண் என்ன நோக்கத்துக்காக தங்கியிருந்தார் என்பதை முகாமையாளர் அறிந்திருந்தாரா என்பது குறித்து அவரிடம் விசாரணை நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

மேலும் சரத் பொன்சேகாவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் பகுதியில் சந்தேகத்துக்குரிய வகையில் நடமாடிய பெண் ஒருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் விசாரணை நடத்திய போது யாழ். மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர் என்றும் கொழும்பு பொது மருத்துவமனைக்கு தான் மாற்றப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அப்பெண் தற்போது இரகசியப் பிரிவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சுகாதார அமைச்சிடம் இது தொடர்பிலான தகவல் களைக் கேட்டறிந்த போது அந்தப் பெண்மருத்துவர் தெரிவித்தவை உண்மை என்று தெரியவந்துள்ளதாகவும் இரகசியப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அப்பெண் விடுவிக்கப்பட்டாரா என்பது குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. (க)

# விமானக் குண்டுவீச்சில் முஸ்லிம்கள் படுகொலை

## முஸ்லிம் காங்கிரஸ் கண்டனம்

(கொழும்பு)

விமானப் படையினரது குண்டுவீச்சில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளமைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வட்டம் மற்றும் தக்வா நகர்ப்பிரதேசங்களில் நடத்தப்பட்ட முப்படையினரின் தாக்குதலின் போது பல முஸ்லிம் கிராம மக்கள் படுகாயமடைந்துள்ளனர். மூவர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

சர்ச்சைக்குரிய தமிழீழ விடுதலைப் புலிகளின் பயண ஒழுங்கு விவகாரமானது தேவையற்ற பதற்றத்தை உருவாக்கியுள்ளது. இரு தரப்பின் ஆத்திரமூட்டும் அறிக்கைகள் தான் இப்போது குண்டுவெடிப்புச் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

நிலையான அமைதி முயற்சிகள் என்பது இரு தரப்பினரும் வன் முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதால் மட்டும் ஏற்படுவது அல்ல. முஸ்லிம்களையும் தனித்தரப்பாக அங்கீகரித்து அமைதி முயற்சிகளில் இணைத்துக் கொள்ள வேண்டும்.

* இராணுவத் தளபதியின் வாகனம் மீதான தாக்குதலை முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாகக் கண்டனம் செய்கிறது. விமானப்படையின் குண்டுத்தாக்குதல்களில் பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதற்கும் படுகொலை செய்யப்பட்டிருப் பதற்கும் எமது கவலையை தெரிவித்துக் கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பேரியல்அஸ்ரப்தலைமையிலான நூவாவும் கொழும்பு குண்டு வெடிப்பைக் கண்டனம் செய்துள்ளது. கத்தோலிக்க ஆயர்கள் மாநாடு மற்றும் தேசிய கிறிஸ்தவ சபை ஆகியவை கொழும்பு குண்டு வெடிப்பு மற்றும் அதி கரித்து வரும் வடக்கு- கிழக்கு வன்முறைகள் குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ளன. (க)

## கட்டுக்கரைக்குளம் பகுதியில் கிளைமோர்த் தாக்குதல்

### 3 அதிரடிப்படையினர் படுகாயம்

(மன்னார்)

மன்னார் -மதவாச்சி வீதியில் உள்ள கட்டுக்கரைக்குளம் பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் ஸ்ரீலங்கா சிறப்பு அதிரடிப் படையினர் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த படையினர் மூவரும் முதலில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

எனினும் அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக வவுனியா மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க)

## சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

வெடிபொருட்களை படகில் ஏற்றிக்கொண்டிருந்த போது கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 5 விடுதலைப் புலி சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசாரணைகளை நடத்த பயங்கரவாத தடுப்புப் பிரிவினருக்கு கொழும்பு தலைமை நீதிபதி குசல சறோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டார். அருணாசலம் டேவிட், வீரசிங்கம் மனோகரன், சீனகுடாவைச் சேர்ந்த முத்துவெளி ஸ்ரீஸ்கந்தராஜா, மன்னார் அப்புலோகப்பரா களுக்குடாவைச் சேர்ந்த பொடியப்பு சுபசேனா ஆகியோர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

நடுக் கடலில் படகு ஒன்றில் வெடிபொருட்களை ஏற்றிக்கொண்டிருந்ததாகவும் கடற்படையினர் அப்படகை நெருங்கிய போது ஐந்து பேரும் படகை கடலில் மூழ்கடித்ததாகவும் டோறாப் படகு சி 473இன் கட்டளை அதிகாரி ஜெயந்த கீர்த்தி சிறி முறைப்பாடு செய்திருந்தார்.

இதையடுத்து பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரில் ஐந்து பேரும் கைதுசெய்யப்பட்டனர். அதன் பின்னர் விளக்கமறியல் நீடிப்புக்காக நீதிமன்றிடம் அனுமதி கோரப்பட்டது. அதை ஏற்ற நீதிமன்றம் எதிர்வரும் மே 19ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிப்புச் செய்து உத்தரவிட்டார். (க)

## காயமடைந்தோரை பார்வையிட்டார் மஹிந்த

(கொழும்பு)

கொழும்பு குண்டுவெடிப்புச் சம்பவத்தில் படுகாய மடைந்த இராணுவத்தளபதி சரத் பொன்சேகா உள்ளிட்டோரை கடந்த செவ்வாய்க்கிழமை மஹிந்த ராஜபக்ஷ மருத்துவமனைக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

அவருடன் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, மஹிந்தவின் செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் டல்லஸ் அழகப்பெருமா ஆகியோர் உடன் சென்றிருந்தனர்.

சரத் பொன்சேகாவின் சிகிச்சை விவரங்களைக் கேட்டறிந்த அவர் மேலதிக சிகிச்சைக்கான அறிவுறுத்தல்களையும் வழங்கினார். (க)

## தொழில்நுட்பக் கல்லூரி பாதுகாப்பு உத்தியோகத்தர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி பாதுகாப்பு உத்தியோகத்தர் இனந்தெரியாத நபர்களினால் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.


இரவுக் கடமையிலிருந்த பொழுது இனந்தெரியாத ஆயுததாரிகளால் இவர் சுடப்பட்டுள்ளார்.

சூட்டுக்கு இலக்கானவர் பாற்பண்ணைவீதி திருநெல்வேலியைச் சேர்ந்த தங்கராசா கமலலோஜன் (வயது -37) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பம் தொடர்பாக சம்பவ இடத்தை பார்வையிட்ட யாழ். மாவட்ட மேலதிக நீதவான் சிறிநிதி நந்தசேகரம் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார்.

சம்பவம் தொடர்பான விசாரணையினை யாழ். பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-15,133)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



சிதறி ஓடும் மனதை இழுத்துப் பிடித்து மீண்டும் தியானப் பொருளின் மீது வலுக்கட்டாயமாக நிலை நிறுத்துவதும் அப்பியாசம்தான். உண்மையில் அது நமக்கும் நமது மனதிற்குமிடையே நடக்கும் ஒரு பொய போராட்டம் என்றே சொல்ல வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

# அரசின் பகிரங்கப் போர்ப் பிரகடனத்தை சர்வதேச சமூகம் கண்டிக்கத் தவறிவிட்டது

(கிளிநொச்சி)

அரசின் பகிரங்கப் போர்ப் பிரகடனத்தையும் அரச பயங்கரவாதப் படுகொலைகளையும் சர்வதேச சமூகம் கண்டிக்காமல் இருப்பது அதிர்ச்சியளிக்கின்றது என்று தமிழீழ விடுதலைப்புலிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்கம் கடந்த ஏப்ரல் 25 ஆம் திகதி முதல் நேரடியாக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ளாதது எமக்கு வருத்தத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்துகின்றது.

கடந்த இரு நாட்களாக அரசாங்கம் சர்வதேசத்தின் கண்காணிப்பில் உருவாக்கப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முற்று முழுதாக பாரியளவில் மீறி வருகின்றது.

திருகோணமலையில் மூதூர் கிழக்கில் முப்படைகளும் பாரியளவில் தாக்குதல்களை நடத்தியதில் 12ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

## தட்டாதெருவில் கிரனைட் வீச்சு

(யாழ்ப்பாணம்)

தட்டாதெருச் சந்தியில் நேற்று மாலை 5.45 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிரனைட் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்களாலேயே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கிரனைட் தாக்குதலையடுத்து அப்பகுதியால் சென்றவர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டனர். (ச-4)

26ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

பல லட்சம் ரூபா மதிப்பிலான தமிழர் சொத்துக்கள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. 40ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

மட்டக்களப்பு வவுணதீவிலும் இராணுவம் ஆட்லறித் தாக்குதலை நடத்தி மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக சீர்குலைக்கப்பட்டுள்ளது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கமைய திறக்கப்பட்ட தமிழர்களுக்கான போக்குவரத்துப் பாதைகளை திடீரென அரசாங்கம் எதுவித முன்னறிவித்தலும் இன்றி மூடியது.

இது மக்களின் இயல்பு வாழ்க்கையை உருவாக்குதல் தொடர்பிலான அரசாங்கத்தின் பாரிய யுத்த நிறுத்த மீறலாகும்.

இதர பகுதிகளுக்கு பணி நிமிர்த்

## ஜெனீவாப்...

நடக்கும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார். ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான திட்டங்களை தயாரிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக தெரிவித்த பௌயர் சில விடயங்கள் தொடர்பாக சிக்கல்கள் நிலவுவதாக தெரிவித்தார்.

ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக இரு தரப்பினரும் தெரிவித்துள்ளனர். எந்தத் தரப்பினராவது வன்முறையில் ஈடுபட்டால் அதன் மூலம் மற்றைய தரப்பும் வன்முறையில் ஈடுபட இடமிருக்கிறது.

தற்போது இரு தரப்பும் முயற்சி எடுத்து அமைதியை நிலைநாட்ட முயற்சி எடுப்பதே முக்கியமானது என பௌயர் மேலும் தெரிவித்தார். இதற்காக தாங்கள் முழுமூச்சுடன் செயற்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச-4)


**TWENTY SIX[TH] DEATH ANNIVERSARY**

23 ✪ 06 ✪ 1929



28 ✪ 04 ✪ 1980

IN FOND MEMORY OF

**LUTHER JAMES SELVARAJAH**

*'To the uninitiated, he brought the light of knowledge*
*To the feeble, the power of strength;*
*To the sinner the liberation of forgiveness;*
*To the suffering, the peace of mercy;*
*To the comfortless comfort'*

'Selva Giri'
57,Arasady Road,
Jaffna.

Wife-Ranee Selvarajah
&
Children-Dushan & Janey

(413)


## விடுதலைப்புலிகள் கவலை

தம் சென்ற தமிழர்கள் இதனால் வீடுகளுக்குத் திரும்ப முடியாத நிலை ஏற்பட்டது.

இத்தகைய சூழ்நிலையால் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் நிரந்த அச்சத்துடன் இருக்கின்றார்கள். இராணுவக் கட்டுப்பாட்டில் அரசாங்கத்தால் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதின் தொடர்ச்சி நிகழ்கின்றது.

ஒட்டுமொத்த தமிழர் தாயகத்திலும் பயங்கரமான அச்சகரமான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இன்று எமது அமைப்பிடம் இருந்து தமிழ் மக்கள் பாதுகாப்புத் கோரி எதிர்பார்த்து நிற்கின்றனர்.

பகிரங்கமாக அரசாங்கம் போர் பிரகடனம் செய்து தமிழ் மக்களை படுகொலை செய்து வரும் நிலையில் சர்வதேச சமூகம் கண்ணை மூடிக்கொண்டுள்ளது.

அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாட்டை சர்வதேச சமூகம் கண்டிக்கத் தவறிவிட்டது. அரசாங்கத்திற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்து இத்தகைய நடவடிக்கைகளைத்தடுக்க தவறிவிட்டது.

இது எமக்கும் எமது தமிழ் மக்களுக்கும் அதிர்ச்சியையும் கவலையையும் அளிக்கின்றது. தமிழ் மக்களுக்கு எதிரான இனப் படுகொலையை அரச பயங்கரவாதத் தாக்குதல்களை சர்வதேச சமூகம் வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என்று வேண்டுகின்றோம்.

சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை அரசாங்கம் சீர்குலைக்க முயற்சிப்பதையும் தமிழ் மக்களும் தமிழீழ விடுதலைப்புலிகளும் போர்ச் சூழலுக்குள் தள்ளப்பட்டிருப்பதையும் சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளும் என்ற நம்பிக்கையுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## வங்காலை...

இதில் இரு கடற்படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை முருங்கனில் நேற்றுக்காலை இடம்பெற்ற கிளைமோர்க் குண்டுத்தாக்குதலில் விசேட அதிரடிப்படையினர் மூவர் படுகாயமடைந்தனர்.

மன்னார் -மதவாச்சிப் பகுதியில் கட்டுக்கரைக்குளம் பிரதேசத்தில் வழமையாக ரோந்து நடவடிக்கையை மேற்கொள்ளும் விசேட அதிரடிப்படையினரை இலக்கு வைத்தே இத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-4,15,49)

## ஏ-9 பாதை...

பிரசாத் சமரசிங்க தெரிவித்த கருத்து நேற்றைய 'வலம்புரி'யில் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏ-9பாதைதிறக்கப்பட்டுள்ளதால் மக்கள் தமது வெளியிடங்களுக்கான பயணங்களை அச்சமின்றி மேற்கொள்ளுமாறு இராணுவத் தரப்புத் தெரிவித்துள்ளது. (ச-4)

## தாக்குதல்...

மன்மோகன்சிங் நேற்று இந்தியா திரும்பினார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையேயான நான்கு ஆண்டு கால யுத்த நிறுத்த ஒப்பந்த முறிவைத் தடுக்கவும் வன்முறைகளைத் தடுக்கவுமான சூழ் நிலைகள் குறித்து மன்மோகன்சிங் ஆலோசனை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டது. (ச-4)

## தலை...

தெரியப்படுத்தியுள்ளார்.

மேலும் திருகோணமலையில் இருந்து கொழும்பு செல்லும் பல பயணிகள் கைதுசெய்யப்பட்டு அதன் பின்னர் காணாமல்போய் வருவதாகவும் அந்தக் கடிதத்தில் சந்திரசேகரன் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-4)

## விடுதலைப்புலிகளின்...

கிழக்குத் தளபதிகள் வன்னி வருவதற்கு ஹெலி வசதி செய்து தருமாறு விடுதலைப்புலிகள் அரசைக் கோரியிருந்தனர். எனினும் அது சாத்தியப்படாத நிலையில் தமது கடற்படைக்கலத்தில் பயணம் செய்வதற்குப் புலிகள் தீர்மானித்தனர்.

எனினும் அசாதாரண சூழ்நிலை காரணமாக அப் பயணம் தடைப்பட்டதுடன் தாக்குதல் சம்பவங்களும்இடம்பெற்றன.

இந்நிலையில் அரசு இப் புதிய யோசனையை அறிவித்துள்ளது. அரச தரப்பின் யோசனை நோர்வே அனுசரணையாளர் ஊடாக புதிய யோசனைகள் பலவற்றை உள்ளடக்கி புலிகளின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

நாம் முன்னர் அனுப்பிய யோசனைகளையெல்லாம் நிராகரித்துள்ள புலிகள் தமக்கு பத்துப் பேர் செல்லக் கூடிய உலங்கு வானூர்தி வேண்டும் என்று நிபந்தனை விதித்திருந்தனர்.

நாம் ஒருவாறு அதனை அடையாளம் கண்டுள்ளதோடு சீ-பிளேன் எனப்படும் கடல் விமானத்தின் உதவியுடன்அவர்களைக் கிழக்கிலிருந்து வன்னிக்கு அனுப்புவது தொடர்பாக புதிய யோசனைகளையும் புலிகளின் பரிசீலனைக்கு நோர்வே அனுசரணையாளர் ஊடாக அனுப்பி வைத்துள்ளோம்.

நாம் வெறுமனே கிழக்கிலிருந்து வன்னிக்குச் செல்வது தொடர்பான ஏற்பாட்டு விடயங்களில் காலத்தை விரயம் செய்ய விரும்பவில்லை.

மாறாக விரைவில் பேச்சு மேசைக்குச் சென்று அதனூடாக கௌரவமான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்குத் தயாராகவிருப்பதாக பாலித கோகன்ண மேலும் தெரிவித்தார். (ச-4)






## தொழில்நுட்பக் கல்லூரி சமூகத்தினருக்கு

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தினுள் வைத்து நேற்று முன்தினமிரவு சுட்டுக் கொல்லப்பட்ட ஊழியரான தங்கராசா கமலலோஜனின் அஞ்சலி நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள், உயர் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரையும் இன்று காலை 9.30 மணிக்கு தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் ஒன்று கூடுமாறு தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. (ஒ)

## சூட்டுக் காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

தேநீர்க் கடை உரிமையாளர் ஒருவர் நேற்றுச் சுடப்பட்டு படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆலடி பொலிகண்டியில் தேநீர்க் கடை நடாத்திவரும் கிருஷ்ண பிள்ளை குகனேந்திரன் (வயது-33) என்பவரே சுடப்பட்டு படுகாயமடைந்தவராவார்.

இவர் தனது மகளுடன் கடையில் நின்றிருந்த சமயம் நேற்று இரு மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் அவரைச் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சுடப்பட்ட அவர் உடனடியாக வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ச)

## இன்று அனைத்து கட்சிக் கூட்டம்

(கொழும்பு)

கொழும்புக் குண்டுவெடிப்பையடுத்து அனைத்துக் கட்சிக் கூட்டத்தை இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூட்டவுள்ளார்.

விடுதலைப்புலிகள் தொடர்பிலும் அமைதி முயற்சிகள் தொடர்பிலும் சர்வதேச சமூகத்திடம் தெரிவிக்க வேண்டியது என்னவென்பது தொடர்பாக இக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

இதற்காக அனைத்துக் கட்சி உறுப்பினர்களைக் கொண்ட தேசிய குழுவென்றும் அமைக்கப்படவுள்ளது. (க)

## மின்சாரம் வழமைக்கு

யாழ்ப்பாணத்தில் மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும் என மின்சாரசபையின் யாழ்.கிளை தெரிவித்தது.

நேற்று முன்தினம் இரவு முதல் குறிப்பிட்ட சில மணி நேரம் மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது.

எனினும் நேற்று ஏ-9 பாதை திறக்கப்பட்டதையடுத்து மின்சார சபைக்கான டீசல் இன்று கிடைக்கப் பெறும் எனவும் மின்சாரசபை தெரிவித்தது.

எனினும் வழமையான நடைமுறையிலுள்ள சுழற்சி முறையிலான மின்வெட்டு தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் எனக் கூறப்பட்டது. (ச)






இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.04.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.